**தலைப்பு 311 - தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்**

**-----------------------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**------------------------**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**-----------------------------------------**

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின ் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**----------------------------------------------------------------**---------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

**---------------------------------------------------------------------------------------------------------**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள˙ மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பெறப்பட்டு திணைக்களத்தால் சுவீகரிக்கப்படாத அனுராதபுர மல்வத்து ஓயா திம்பிறிகடவல காணியின் பெறுமதி ரூபா 92,000,000 ஆக நிதிநிலமைக்கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2022 மே 28 இல் திருத்தஞ்செய்யப்பட்டது. | திணைக்களத்திற்குரிய சொத்துக்கள் மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு உரித்திடுடையதாகும். |

### (ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்கப்படாமை

கீழே குறிப்பிடப்பட்ட சில பதிவேடுகள் திணைக்களத்தால் பராமரிக்கப்படாத அதேநேரம் சில பதிவேடுகள் புதுப்பிக்கப்படவில்லை என மாதிரி கணக்காய்வு பரீட்சையில் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502 (2) இன் 11 ஆவது செலவீனத்தின் பிரகாரம் | நிலையான சொத்துக்கள் நாளதுவரையாக்கப்பட்டிருந்ததடன் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் சொத்துக்கள் 287 ஆம் | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் நாளதுவரையாக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்கள் பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை. | இலக்க படிவத்தில் பதியப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் பதிவுப்புத்தகங்கள் பராமரிக்கப்படவில்லை. | அனைத்து வாகனங்களுடன் தொடர்புடைய புத்தகங்கள் 2022 மே 30 இல் புதுப்பிக்கப்படும். | ஓவ்வொரு வாகனங்களுடன் தொடர்புடைய வாகனப் பதிவுப் புத்தகங்கள் புதுப்பித்த நிலையில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பராமரிக்கப்பட வேண்டும். |
| (iii) | அரச பெறுகை வழிகாட்டிகளின் 2.11.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வருகைப் பதிவேடு குழுவின் செயலாளரால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இல் தவறவிடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இது பராமரிக்கப்படும். | அரச பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் மற்றும் பிணையாக இருக்கவேண்டிய உத்தியோகத்தர்களின் விபரங்களை உள்ளடக்கிய பிணைப்பாதுகாப்பு பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நிதிசார் பொறுப்பிற்காக உத்தியோகத்தர்களின் பிணைக்கூற்று மற்றும் பிணையை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும் அமைச்சு செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணை வைப்புப் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| பொலனறுவை சுற்றுலாவிடுதியில் தங்குமிட வசதியினை வழங்கியதற்காக 1-5 வருடங்களிற்காக சனாதிபதி செயலகத்திடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 343,800 நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 06 கடிதங்கள் மூலம் சனாதிபதி செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விடுதியில் தங்குமிடத்தினை வழங்குவதற்கு முன்னர் பணம் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் நிலுவைகளானது மீண்டும் தங்குமிட வசதியினை வழங்குவதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டும். |

## 2.2 செலவீன முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகளை முடியுமான வரையில் சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனினும், 04 வாக்குகளின் மதிப்பீட்டு நிதியேற்பாடு ஆன ரூபா 9,900,000 இல் 34 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்தில் ரூபா 4,434,305 மீளாய்வாண்டின் போது வேறு வாக்குக்கு மாற்றப்பட்டிருந்தது. | 03 வாகனங்களில் எதிர்பார்க்கப்படாத திருத்தங்களினால் அவைகள் மாற்றப்பட வேண்டியென்பதுடன் வெளிநாட்டுப் பயணம் இல்லாமையால், வாகனப் பராமரிப்பு குறைவடைந்தமை மற்றும் அலுவலகப் பயணங்களில் வரையறை ஏற்பட்டமையால் அத்தகைய செலவீன விடயங்களில் சேமிப்பு ஏற்பட்டது. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நடைமுறை நிலைமை கவனத்திற் கொள்ள வேண்டும். |

## 2.3 வரையறையை மீறுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெறுகைகளின் அதிகுறைந்த வரையறை ரூபா 8,300,000 ஆகவிருந்ததுடன் உள்ளபடியான முற்பணப் பெறுகைகள் ரூபா 6,587,149 ஆகவிருந்தது. பெறுகைகளானது ரூபா 1,712,851 ஆல் அதிகுறைந்த வரையறையை அடையவில்லையென அவதானிக்கப்பட்டது. | உரிய திருத்தத்திற்காக கடிதமானது 2021 திசெம்பர் 31 இல் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்பட்ட வரையறைகளை பேணமுடியாத சந்தர்ப்பத்தில் குறித்த திகதிக்கு முன்னர் அனுமதியைப் பெறுவதற்கான சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2019 யூன் 17 ஆந் திகதிய அரச நிதிச்சுற்றறிக்கை எண் 5/2019 இன் 3(ஆ) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச்செல்லும் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய கடன்மீதிகளை தீர்க்கவேண்டிய போதிலும் 2021 ஏப்ரல் 01 இலிருந்து நீதி | கணக்கு சுருக்கங்களில் 2022 பெப்ரவரி அளவில் தீர்க்கப்பட்டது. | தீர்க்கப்படாத கடன் மீதிகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 203,200 தொகையை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ ) | 2019 யூன் 17 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் 3(ஆ) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் மற்றும் சிவில் நடைமுறை சட்டத்தின் XXIV அத்தியாயத்தின் படி, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் உடனடியாக பெறப்பட வேண்டும். ஆனால், 2020 திசெம்பர 31 இலிருந்து 2021 செப்தெம்பர் 21 வரையிலும் ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை செலுத்தப்பட்டவர்களிடமிருந்தும் ரூபா 654,905 தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி அளவில் ரூபா 175,190 தொகையான கடன்மீதி அறவிடப்பட்டிருந்தது. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தரின் கடன்மீதி அவர்களுடைய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | பதவியை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன்மீதிகள் 2019 யூன் 17 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் 3(உ) ஆம் பிரிவு மற்றும் சிவில் நடைமுறை சட்டத்தின் XXIV அத்தியாயத்தின் படி கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். 02 தொடக்கம் 25 வருடங்கள் கடந்திருந்தபோதிலும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 202,175 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 30,000 தொகையான இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன்மீதிகளை பதிவழிப்புச்செய்வதற்கு அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருந்தது. மிகுதி கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 பொறுப்புக்களை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டுக்கு என 2022 இல் செலவழிக்கப்பட்ட 24 பற்றுச்சீட்டுக்களிக் கூட்டுத்தொகையான ரூபா 667,858 ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் கூற்றில் பதியப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கையில் இயலுமானவரையில் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் முறையாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா. | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | |
| | நிதிப்பிரமாணம் 880 | 273,000 | பிரமாணம் 612 இன் அதிகாரத்தின் கீழ் பொதுப் பணம், வருமானம் மற்றும் அரசிற்கு சொந்தமானவற்றைக்குப் பொறுப்பாக கடமையாற்றுவதற்காக வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அல்லது பொதுப் பணத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாகவிருக்க அதிகாரம் கொடுக்கப்பட்ட | அத்தொகைக்கான கடிதம், உத்தியோகத்தர்களின் பிணையுடன் தொடர்புடைய படிவங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங் கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் அவர்களுக்குப் பிணையாக வைப்புக்களாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் 36 உத்தியோகத்தர்கள் தொகையை பிணையாக சமர்ப்பிக்கவில்லை. | | |
| (ஆ) | பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் அமைச்சுச் செயலாளரின் 2001.08.22 ஆந்திகதிய 18/2001 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 5 வருடங்களிற்காக ஒரேஇடத்தில் அனைத்து தீவு சேவை உத்தியோகத்தர்கள் வேலைசெய்தால் அவர்களை மாற்றஞ்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 06 வருடங்களிலிருந்து 33 வருடங்கள் வரை வேலைசெய்த 31 உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு மேலாக சேவையை ஒரே இடத்தில் பூர்த்தி செய்த இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் விபரங்கள் மாற்றல் தரவு முறைமைக்கு (misco) நாளதுவரையாக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் இணங்க வேண்டும். |

## 2.6 முற்பணங்களை வழங்கல் மறறும் தீர்த்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந்திகதிய 01/2020 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கை மற்றும் 371(5) இன் பிரகாரம், உப கட்டுநிதியைப் பெற்ற உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வேலையை முடித்த பின்னர் 10 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்ய வேண்டிய போதிலும், ஆனால், ரூபா 131,790 மொத்தத்தொகையான கட்டுநிதிகள் 04 சந்தர்ப்பங்களில் 29 -125 நாட்கள் வரையிலான காலதாமத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த நிலைமை குறைக்கப்பட்டு முறையாக முற்பணங்கள் தீர்க்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணமீதியாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 475,350 ஆகவிருந்ததுடன் அந்த மீதிகளில் ரூபா 80,000 முற்பண மீதியொன்று 05 வருடங்களாக இருந்தது. | முற்பணம் தீர்க்கப்படும். | சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.7 அறவிடவேண்டிய மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆகஸ்ட் 14 ஆம் திகதி திணைக்களத்தில் நிரந்தரமாக வேலைக்கமர்த்தப்பட்டு முறியில் கையொப்பமிட்டு பொதுச்சேவையிலிருந்து ஓய்வுபெற்று வெளிநாடு சென்று அதற்கு இணங்கி திரும்பாத உதவி இயக்குனரிடமிருந்து (கட்டிடக்கலை நிபுணர்) ரூபா 610,782 அறவிடப்படவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | உடனடி அறவீட்டிற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூரநோக்கு மற்றும் இலட்சியநோக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் தூரநோக்கானது திட்டமிடப்பட்ட, நிலையான மற்றும் செழுமையான, ஏற்புடைய, போற்றக்கூடிய மற்றும் நிலமத்தை உருவாக்கலாக இருப்பதுடன் அதன் இலட்சிய நோக்கானது தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகள் திட்டமிடல் | 2019 ஆம் ஆண்டில் 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய பௌதீக திட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அந்தத்திட்டத்தை நாளதுவரையாக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. | திணைக்களத்தின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் நோக்கங்களை இலக்காகக் கொண்டு அவற்றை அடைவதற்கு உரிய திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

மற்றும் தந்திரோபாயங்களை வழிவகுத்து இலங்கையின் காணி மற்றும் பிராந்திய நீர்த்தேக்கங்களின் பொறுளாதார, சமூக, கௌதீக மற்றும் சுற்றாடல் விடயங்களை கருத்திற்கொண்டு ஒருங்கிணைந்த திட்டத்தை ஊக்குவித்து மற்றும் வழிகாட்டும் நோக்கத்துடன் உள்நாட்டு மற்றும் பிராந்திய திட்டங்களினூடாக உறுதிப்படுத்தி அதனுடைய அமுலாக்கலை மேற்பார்வை செய்வதாகும். எனினும், திணைக்களத்தின் 115 உத்தியோகத்தர்கள் இலட்சிய நோக்கத்தினை தாண்டி புனித இடங்களை சுத்திகரித்தல் மற்றும் ஏனைய அலுவல்களின் தொடர்ச்சியாக ஆகையால், திணைக்களமானது அத்தகைய வேலைகளை மேற்கொள்வதற்கு நேரத்தை ஒதுக்கி ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

## 3.2 பூர்த்தியடைந்திருக்காத நடவடிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2000 இன் 49 ஆம் இலக்க நகர மற்றும் நாட்டு திட்டமிடல் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டங்களைத் வழிப்படுத்தி தயார்படுத்தல் 2022 ஜனவரி 31 அளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த வேலையானது 2022 மார்ச் 31 அளவிலும் முடிவுறுத்தப்பட்டு அனுப்பப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டில் பௌதீக திட்டமிடலிற்காக ரூபா 1,240,938 தொகையொன்று | 2019 யூன் இல் தேசிய பௌதீக திட்டமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன் இதனை நாளதுவரையாக்குவதற்காக சிரேஸ்ட நகர கட்டிடக்கலைநிபுணருடன் ஆலோசிக்கப்பட்டதுடன் உரிய வரைபடங்களைத் தயாரிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டது. தேசிய பௌதீக திட்டமானது ஏனைய அமைச்சுக்கள் குழுவிற்கு தேசிய பௌதீக வடிவமைப்பு சபைக்கு சமர்ப்பித்து அதன் அனுமதிக்கு பிறகு அத்திட்டத்தை | அதிகாரச்சட்டத்திற்கிணங்க இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | அமுல்படுத்துவதற்காக நிறுவனங்களுக்கு அறிவிக்க வேண்டும். | |
| **(ஆ)** | லோலுகஸ்வெவ நகர அபிவிருத்தித் திட்டமானது அனுராதபுர புனித பிரதேசத்தில் குடியேற்றங்கள் விஸ்தரிப்பதை குறைப்பதற்றும் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கும் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 இலிருந்து 2021 வரையிலும் ரூபா 634.7 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 13.41 மில்லியன் அதாவது 2.1 சதவீதம் மட்டுமே 5 ஆண்டு காலப்பகுதிக்காக செலவிடப்பட்டுள்ளது. இதற்காக 2017 ஆம் ஆண்டின் போது சாத்தியவளக் கற்கையினை மேற்கொள்ளல், ஆய்வுதிட்ட அலுவலகம் கட்டுதல் மற்றும் நிலத்தின் எல்லையை குறித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. இதன் போது புனித பூமியை அண்மித்த வதிவாளர்கள் லோலுகஸ்வெவ பிரதேசத்திற்கு குடியேற்றுதல் தொடர்பில் நிலவிய சமூக சிக்கல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்ால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | இந்தத் செயற்திட்டத்திற்காக காணிகளை வழங்குவதில வனப்பாதுகாப்பு திணைக்களம் காலதாமதம் செய்தமையால் 2021 யூன் வரையிலும் ஆரம்பிக்க முடிந்திருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் அமுல்படுத்துவதற்காக வேண்டப்பட்ட அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முறையாக செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். |
| **(இ)** | கிழக்கு, ஊவா, மற்றும் வடக்கு மாகாணங்களில் 03 பிராந்திய பௌதீக திட்டங்களை தயாரித்தலானது மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால், அத்தகைய திட்டங்கள் தேசிய பௌதீக திட்டமானது அமுல்படுத்தப்படாமையால் தயரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிராந்திய திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டிகள் வரையாக்கப்பட்டதுடன் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கொரோனா காரணமாக வேலைகளை தொடங்க முடிந்திருக்கவில்லை. | நாட்டின் தேவைகளையும் திணைக்களத்தின் இலட்சியத்தையும் கருத்திற்கொண்டு செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடையாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனங்களால் கையளிக்கப்பட்ட 20 பிராந்திய பௌதீக திட்டங்களில் (சிறிய நகரங்கள் மற்றும் சேவை நிலையங்கள்) 13 திட்டங்களை தயாரித்தலிற்கான திட்டங்களானது ஆண்டின் இறுதிவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் திணைக்களமானது 03 திட்டங்களின் தயார்படுத்தலை பூர்த்திசெய்திருந்ததுடன் 04 திட்டங்களை தற்போது தயாரித்துக்கொண்டிருக்கின்றது. | கொரோனா பரவல் நிலைமையால் 09 சேவை நிலையங்களிற்கான திட்டங்களை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டது. | திணைக்களத்தின் முக்கிய செயற்பாடுகளிற்கான பௌதீக திட்டங்கள் பட்டியலிடப்பட்ட திகதியில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 10 மகா விகாரைகள் பூஜை பூமியாக அறிவிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டு,திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 07 விகாரைகளுக்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.ஆனால் ஆண்டில் குருநாகல் மத்தேபொல ரஜமஹா விகாரை மட்டும் பூஜை பூமியாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படவில்லை. | வர்த்மானி பிரசுரிப்பதற்கு முன்னர் அந்த நிலங்களின் சான்றளிக்கப்பட்ட கணக்கெடுப்பு திட்டங்கள் மற்றும் அந்த காணிகளின் சட்டபூர்வ உரிமையை சரிபார்க்க வேண்டும்.அந்த நடவடிக்கைகள் தாமதமானதால் பூஜை பூமிக்கான வர்த்தமனி அறிவிப்பு வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது. | திணைக்களத்தின் நோக்கம் மற்றும் தொலை நோக்கு பார்வையின் படி,எதிர்பார்த்த பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க தேவையான நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. |

## 3.4 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 7.3 மில்லியன் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு பெறுகைத்திட்டம் தயரிக்கப்பட்டிருந்த போதும் பெறுகைத்திட்டத்தின் பிரகாரம் ரூபா 4.78 மில்லியன் மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும், 2021 ஆம் ஆண்டின் | முன்னுரிமை கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இணங்காணப்பட்டமையால் அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முன்னுரிமை கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் முறையாக இனங்காணப்பட்டு அதற்கிணங்க பெறுகைத் திட்டம் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத ரூபா 3.29 மில்லியன் தொகையான 8 உருப்படிகளின பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிகளின் 2.11.1 (ஈ) ஆம் பிரிவுகளின் பிரகாரம், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு இணைந்து பெறுகைத் நேர அட்டவணை, பெறுகை முறைமை, மற்றும் விலைமனு ஆவணங்களின் வகை தொடர்பான உடன்படிக்கைகயை அடைந்துகொள்வதற்காக கூட்டுக்கூட்டமொன்றை நடாத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,300,000 தொகையான பெறுகை நடவடிக்கைகளிற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு இணைந்து கூட்டுக்கூட்டமொன்றை நடாத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு எரிபொருள் பரீட்சையின் பின்னர் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் ஓடிய பின்னர் இயந்திரத்துக்கு ஏதாவது பாரிய திருத்தம் ஏற்பட்ட பின்னர் அல்லது 03 விடயங்களில் முதலி திணைக்களத்திற்கு சொந்தமான 04 வாகனங்களில் 2014 ஆம் ஆண்டிற்கு பின்னர் 04 வாகனங்களுக்கும் 2019 ஆம் ஆண்டிற்கு பின்னர் மேலும் 04 வாகனங்களுக்கும் 2020 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஏனைய 06 வாகனங்களுக்கும் எரிபொருள் பரிசோதனை செய்யப்படவில்லை. | 2021 இல் 05 வாகனங்களுக்காக எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளுக்கிணங்க பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் உரிய மாதத்தின் பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் திணைக்கள வாகனங்களின் வாகன ஓட்டுதல் அறிக்கைத் தாள்கள் மற்றும் ஓட்ட அட்டவணை சுருக்க அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்பட்டு வாகனங்களிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அதன்படி எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட வழுக்கள் சரிசெய்யப்பட வேண்டும். | வாகன ஓட்ட அட்டவணை மற்றும் சுருக்கம் கணக்காய்விற்காக குறிப்பிடப்பட்ட திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 இல் இருந்து 05 வாகனங்களிற்காக வருமான உரிமச் சான்றிதழ்கள் பெறுவதில் 06 மாதங்கள் தொடக்கம் 91 மாதங்கள் வரையிலான காலதாமதம் ஏற்பட்டமையால் அந்த 05 வாகனங்களுக்காக திணைக்களம் தண்டப்பணம் செலுத்தவேண்டி ஏற்பட்டது என அவதானிக்கப்பட்டது. | ஓடும் நிலைமையை ஏற்படுத்திய பின்னர் உரிமச்சான்றிதழ்களைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தண்டப்பணம் செலுத்தப்படாது குறிப்பிடப்பட்ட திகதியில் வாகன உரிமைச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தால் 2017 இல் பெறப்பட்ட ரூபா 31,750,000 பெறுமதியான 05 வாகனங்களின் உரிமையாண்மையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | குறிப்பிடப்பட்ட திகதியில் உரிமையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 04 வாகனங்களின் இயந்திரங்களை திருத்துவதற்கு ரூபா 2,940,390 தொகையை செலவழித்ததுடன் மேற்கூறப்பட்ட செலவீனம் மூலதன செலவீன வாக்கின் கீழ் ஏற்பட்டிருந்தமையால் அந்தச் செலவீனம் வாகனங்களின் பெறுமதிக்கு சேர்க்கப்பட்டோ மூலதனமாக்கப்பட்டோ இருக்காததுடன் திறைசேரிக்கு (கொம்ரோலர் ஜெனரல்க்கு) அனுப்பப்பட்டிருக்காததுடன் வாகனப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனப்பதிவேட்டில் இவ்வாகனம் தவறாக பதியப்பட்டிருக்காததுடன் திருத்தங்கள் கொம்ரோலர் ஜெனரல்க்கு அனுப்பப்படும். | பெறுமதிகள் சொத்துப் பதிவேட்டில் சரியாக பதியப்பட வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்திற்குச் சொந்தமான பின்வரும் காணிகளின் உரிமையாண்மையை சுவீகரிப்பதற்கும் அதன் பெறுமதியை மதிப்பிட்டு கணக்குகளில் பதிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை உரிமையை சுவீகரிப்பதற்காக காணி பணிப்பாளர் நாயகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகின்றது. | திணைக்களத்திற்குச் சொந்தமான காணி சுவீகரிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காணியின் இடவமைப்பு

திணைக்களத்திற்குச் சொந்தமான பின்வரும் காணிகளின் உரிமையாண்மையை சுவீகரிப்பதற்கும் அதன் பெறுமதியை மதிப்பிட்டு கணக்குகளில் பதிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| காணியின் இடவமைப்பு | சொத்தின் குறியீடு |
|---|---|
| கதிர்காம ஒசுஉயனக் காணி (மூலிகைத் தோட்டம்) | 6113124 |
| கதிர்காம பிலிஹிறிம்ஸ் றெஸ்ற் காணி | 6113124 |
| கதிர்காம சுற்றுலா விடுதிக் காணி | 6141101 |
| கதிர்காமக் காணி | |

### 3.6 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சுற்றுலாவிடுதியிலுள்ள பராமரிப்பாளர் போலி ஆவணங்களைத் தயாரித்து பணத்தினை தவறாகப் பயன்படுத்தியிருந்தார். அதற்கான விசாரணை நிறுவன மட்டத்தில் மாத்திரம் நடைபெற்றதுடன் இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதிகாரியின் வதிவிடத்தை கண்டுபிடிக்க முயற்சி செய்யப்படுகின்றது. | முறையான விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட்டு தீர்மானம் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களமானது 2019 மற்றும் 2020 இல் கதிர்காமத்திலுள்ள 02 தங்குமிடங்களை புனரமைப்பதற்கு ரூபா 89,609,700 ஐ செலவு செய்ததுடன் 2019, 2020, மற்றும் 2021 இல் உழைக்கப்பட்ட | கொவிட் காரணமாக 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் குறைவடைந்தது. | செலவினங்களை சமாளிக்கும் வகையில் குறைந்தபட்சம் போதுமான வருமானம் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் முறையே ரூபா 383,900 , ரூபா 86,900 மற்றும் ரூபா 10,450 ஆகவிருந்தது. | | |
| (இ) | திணைக்களத்திற்கு சொந்தமான பத்ரமுல்ல திவவன்ன உத்யான மாவத்தையில் அமைந்துள்ள 2015 ஆம் ஆண்டு ரூபா 5,160,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 104 இலக்கம் கொண்ட உத்தியோக பூர்வ இல்லம்,2017 ஆம் ஆண்டு ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் சொத்தாக பேணப்பட்டது மற்றும் நிறுவனத்தின் வேறு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது. | இக்காலப்பகுதியின் போது அலுவலக இல்லங்கள் கேட்கப்பட்டிருக்காததுடன் எதிர்காலத்தில் இதனை அவர்களுக்கு முறையாக ஒதுக்க முடியும். | திணைக்களத்தால் சொந்தமாக்கப்பட்ட பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களமானது திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களிடமிருந்து கட்டணங்களை அறவிடவில்லையென்பதுடன் 2018 ஒக்தோரபர் 31 இல் உள்ளூர் சபையொன்றிற்கு உடுபடுவ நகர திட்டத்தினை தயாரிப்பதற்காக ரூபா 180,000 மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 08 இல் முற்பணமாக ரூபா 68,000 பெறப்பட்டிருந்தது.<br><br>இந்தத் திட்டத்தை தயாரிப்பதற்காக மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி 2018 திசெம்பரிலிருந்து 2019 மார்ச் வரையான காலப்பகுதியாகும். ஆனால், திட்டமானது 2022 யூன் 17 அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் உள்ளூர் சபையிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 68,000 தொகை பொது வைப்புக்களில் பேணப்பட்டிருந்ததுடன் பின்னர் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பிரகான செயற்பாடகவுள்ள நகர திட்டங்களை தயாரித்தல் தொடர்பிலும் பொதுவான முறைமைகளை பின்பற்றாமை தொடர்பிலும் குறிப்பிட்ட திகதியில் அத்தகைய வேலைகளை முடிக்காமை தொடர்பிலும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மூலதன செலவீன வாக்கு 311-1-1-0-02-2506 ஆம் இலக்க மூலதனச் செலவீன் கீழ் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 205,200,000 இல் 98.74 சதவீதத்ததை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற | லொலுஹசெவ செயற்திட்டத்தினை அமுல்படுத்தாமையால் ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக ஏற்பாடுகள் செலவழிக்கப்பட வேண்டியதுடன் அவைகள் |

| | | |
|---|---|---|
| ரூபா 202,607,846 தொகையொன்று அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் செலவழிக்கப்பட்டிருக்காததுடன் ஆண்டின் இறுதியளவில் மீதமாகவிருந்தது. | | பட்டியலிடப்பட்ட திகதியினுள் பூர்த்திசெய்ய்பட்ட வேண்டும். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் துறையின் 07 பெப்ரவரி 2014 திகதியிட்ட டிஎம்எஸ்/1 117 கடிதத்தின் படி,10 பணிஆய்வாளர்கள் 14 காவலர்கள் 91 தொழிலாளர்கள் 115 தனிப்பட்ட பதவிகள் வகிப்பவருக்கு அனுமதி வழங்கப்பட்ட போதிலும்,31 டிசம்பர் 2021 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 283 மற்றும் உள்ளபடியான பதவியணி 158 ஆக காணப்பட்டதால் 125 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது.அதாவது நிறைவேற்று அதிகாரத்தில் உள்ள 51 பதவிகளில் 41 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டது. இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 80 சதவீதமாகும்.ஆகையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 44 அதிக சதவீதமாக பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.இதன் காரணமாக,தேசிய இயற்பியல் திட்டத்தை புதுப்பிப்பதற்கும் அது தொடர்பான வரைபடங்களை வேறு தனியார் நிறுவனத்திற்கு தயாரிப்பதற்கும்,தகவல் அறிக்கையை தயாரிப்பதற்கும், திணைக்களத்தின் பதவியை | பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. | திணைக்களத்தின் பணிகளை வினைதிறனாக மற்றும் திறமையாக மேற்கொள்ள தேவையான பதவி வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்ப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திறம்பட மேற்கொள்ள முடியவில்லை.அங்கீகரிக்கப் பட்ட தேசிய இயற்பியல் திட்டத்தை செயற்படுத்துவது குறித்து சம்பந்த்ப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கவும் இதனால் திணைக்களத்தின் முக்கிய பணிகள் பெரும்பாலனவை திணைக்களத்திலிருந்தே வெளிக்களப்படுத்தல் செய்யப்படுவதை அவதானிக்க முடிந்தது. | | |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் 13.3 க்கு முரனாக மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவி 2017 ஜுலை 03 ஆந் திகதி முதல் 04 வருடங்களும், 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் 2015 நவம்பர் 30 முதல் 06 வருடங்களாக தொடர்ச்சியாகவும் பதிற்கடைமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. | பதிற்கடமை நியமன தாபன விதிக்கோவையின் வெற்றிடங்கள் 2 மாதத்திற்குள் நிரப்பப்பட வேண்டும். மற்றும் நிறுவனத்தின் செயல்திறனை பாதிக்கும் இந்த பதவிகளை நிரப்ப தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |